79

பரிசுத்த நற்கருணை வேளை

AT HOLY COMMUNION

33
33
THE REGISTRAR OF
7 OCT 1942

பரிசுத்த நற்கருணை வேளை

AT HOLY COMMUNION

79

பில்லிஸ் கிரகாம்
எழுதிய
'சிறுவர் ஆராதனை'
என்னும் நூலின்
மொழிபெயர்ப்பு.

327

264.1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 OCT 1942
MADRAS

S. P. C. K. IN INDIA
POST BOX 501, PARK TOWN
MADRAS
1942

Price 4 annas

Q6 : 4146

குருவானவர் பரிசுத்த பாத்திரங்களை ஏந்திக்கொண்டு வருகிறார்.

அவர் உள்ளே வருகையில் சில சமயங்களில் ஒரு சங்கீதமாவது ஞானப்பாட்டாவது பாடப்படுகிறது.

இது இன்டிராய்ட் என்று சொல்லப்படும். குருவானவர் பரிசுத்த பீடத்தின் படிகளில் நின்று மிக மெல்லிய குரலில் ஆயத்த ஜெபங்களைச் சொல்லுகிறார்.

OFFICE OF THE REGISTRAR OF
7 OCT 1942
MADRAS

இயேசு ஸ்வாமிக்குச் சிறு பிள்ளைகளைப் பார்க்கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது! அவர் சிறுவரைப் பார்த்து "நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்" என்கிறார்.

உங்களை ஆலயத்தில் காண்பது அவருக்கு அதிக சந்தோஷம்.

இப்போது நீங்கள் முழங்கால்படியிட்டு இயேசு கிறிஸ்துவைப்பற்றி தியானம் பண்ணுங்கள். நீங்கள் இயேசுநாதருக்கு உரியவர்கள்.

'பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே நாங்கள் ஆராதிக்க வருகிறோம். ஆமென்' என்று அமைதலாகச் சொல்லுங்கள்.

குருவானவர் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லுகிறார்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

அதன்பின் குருவானவர் பரிசுத்தத்திற்காக ஒரு சுருக்க ஜெபம் செய்கிறார்.

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவி னிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருளும். ஆமென்.



இயேசு ஸ்வாமி சிறு பையனாக, தம் வீட்டிற்கு அருகிலிருந்த ஒரு குன்றின்மேல் நிற்பதாக இந்தப் படம் காண்பிக்கிறது.

காற்று எவ்விதம் வீசுகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முடிகிறதா?

பரிசுத்தாவியானவரும் காற்றைப்போல்தான் இருக்கிறார்.

(தொடர்ச்சி 6-ம் பக்கத்தில் காண்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உங்கள் இருதயத்திற்குள் வந்து அவருக்கு விருப்பமில்லாத பட்சமற்ற எண்ணங்கள் இருந்தால், அவைகளை எல்லாம் அப்பால் அடித்துக்கொண்டுபோய் விடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

ஜெபம். சுத்தாவியாம் தேவா

சுத்தம் யாம் அடையுமட்டும் நீர்

அடியார்மேல் வீசுவீர்.

பின்பு குருவானவர், பத்துக் கற்பனைகளையாவது, இயேசுகிறிஸ்து சுருக்கிச் சொல்லியுள்ள கற்பனைகளை யாவது வாசிக்கிறார்.

முதல் ஒன்பது கற்பனைகளாவது அவற்றின் மொத்தக் கருத்தாவது வாசிக்கப்பட்டதும் பின்வருவதைப் பாட வேண்டும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

பத்தாவது கற்பனைக்குப்பின் பாடவேண்டியது.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

சில வேளைகளில் நாம் எல்லாரும் பின்வருவதைப் பாடுகிறோம்:—

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

ராஜாவுக்காகச் சொல்லப்படும் ஜெபத்தை குருவான வர் வாசிக்கலாம்.

ஜெப புஸ்தகத்திலிருந்து அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தைக் குருவானவர் வாசிக்கிறார் அல்லது பாடு கிறார்.

ஜெபபுத்தகத்திலிருந்து நிருபவாக்கியம் வாசிக்கப்படு கிறது.

இங்கே ஓர் ஞானக் கீதம் பாடலாம்.

சுவிசேஷ வாக்கியம் சொல்லப்படுகிறது அல்லது பாடப்படுகிறது.

இயேசு ரட்சகர், நாம் அவரை நன்றாய் அறியவேண்டு மென்று விரும்புகிறார்.

அவர் முன்பு தம் சிநேகிதருக்குக் கற்பித்தபடி நமக்கும் கற்பிப்பார்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்கும்படியாக, அவர்கள் அவரைச் சூழ்ந்துகூடி வந்திருப்பதைப் பாருங்கள்.

இயேசுவானவரின், நண்பரில் ஒருவர் எழுதிய நிருபத்தை, ஓரிடத்தில் அமர்ந்து கவனித்துக் கேளுங்கள்.

எழுந்து நின்று, இயேசுஸ்வாமியைக் குறித்து நமக்குச் சொல்லும் சுவிசேஷத்தைக் கவனித்துக் கேளுங்கள்.

சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் பின்வருவதைப் பாடுங்கள்.

தேவரீருக்கே, மகிமையுண்டாவதாக.

சுவிசேஷத்தின் முடிவில் பின்வருவதைப் பாடுங்கள்.—

கிறிஸ்துவுக்கே, ஸ்தோத்திரமுண்டாவதாக.

குருவானவர் நீசெயா விசுவாசப் பிரமாணத்தை ஆரம்பிக்கிறார்:

வானத்தையும் பூமியையும் . . .

எல்லாரும் குருவானவரோடு சேர்ந்து பாடுகிறோம்:

வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரேபேறுன குமாரனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினுலே ஜெநிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த்தேவனில் மெய்த் தேவனுனவர், உண்டாக்கப்படாமல், ஜெநிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரேதன்மையுடையவர்; சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினுல் கன்னிமரியாளிடத்தில் அவதரித்து, மனுஷனுனர்: நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிருர்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை. கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனேடும் கூடத் தொழுது தோத்தரிக்கப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்.

பின்பு குருவானவர் அந்த வாரத்தில் நடைபெறும் ஆராதனைகள், விசேஷ கூட்டங்கள் முதலியவைகளை அறிவிப்பார்.

அதன்பின் பிரசங்கம் செய்யப்படுகிறது.

குரு பிரசங்கம் செய்யும் சமயத்தில் அவரைப்பார்த்துக் கவனிக்கவேண்டும்.

பிரசங்கம் உங்களுக்கு விளங்காவிட்டால், இயேசு ரட்சகர் பிரசங்கம் செய்ததைக் காட்டும் இப்படத்தைப் பார்த்து அவரைப்பற்றி தியானித்துக்கொண்டிருங்கள்.



நாசரேத்திலுள்ள தேவாலயத்தில் இயேசுகிறிஸ்து பிரசங்கம் பண்ணினதை இப்படம் காட்டுகிறது.

அவர்கள், அவரை எப்படி நோக்கிப் பார்த்துக் கவனிக்கிறுர்கள் என்பதைப் பார்க்கிறீர்களா?

குருவானவர் காணிக்கை வாசகங்களைச் சொல்லு கிருர்.

ஒரு ஞானக்கீதம் பாடப்படுகிறது.

பாட்டுப் பாடுகையில் குருவானவர் அப்பத்தையும் திராட்சரசத்தையும் திருப்பீடத்தின்மீது வைத்து அவை இயேசுஸ்வாமியின் சரீரமும் இரத்தமுமாக மாறும்படி அவற்றை சமர்ப்பிக்கிருர்.

ஜனங்கள் கொடுத்த காணிக்கையை குருவானவர் காணிக்கைத் தட்டில் வைத்து, கர்த்தருடைய ஊழியத் திற்கே அது செலவிடப்படும்படியாக, திருப்பீடத்தில் அதைக் கர்த்தருக்குச் செலுத்துகிருர்.

சிறுவன் இயேசுவிடம் கொடுத்த அப்பத்தையும் மீனையும் அவர் வாங்கி, ஆசீர்வதித்து அவற்றைக்கொண்டு ஐயாயிரம்பேரைப் போஷித்தார்.

குருவானவர் நமக்காக சமர்ப்பிக்கிற அப்பத்தையும் திராட்சரசத்தையும் இயேசுவானவர் ஏற்று அவை நம் ஆத்தும போஜனமாகும்படி செய்வார்.

இயேசுவே! என் ஜீவனை உமக்குப் படைக்கிறேன்.

என்னை ஏற்று,

நீர் என்னை உபயோகிக்கத்தக்கதாய் ஆக்கும்.

இயேசுஸ்வாமியை நீங்கள் நேசிக்கிறீர்கள் என்பதைக் காட்ட, கூடுமானால் காணிக்கைப் பையில் கொஞ்சம் காணிக்கை போடுங்கள்.

குருவானவர் சபையார் முகமாய்த் திரும்பி, 'இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்து சபையனைத்துக்கும் சீருண்டாக ஜெபம் பண்ணக் கடவோம்' என்று சொல்லுகிறார்.

பின் சொல்லப்படுகிறவர்களுக்காக ஜெபிக்கிறோம்,

நம் சக்கரவர்த்தி, அரசாங்கத்தார், அத்தியக்ஷர்மார், குருமார், விசேஷமாக நமது சபையிலுள்ள குருமார்,

எல்லா மிஷனெரிமார், வைத்தியர், உதவி ஆட்கள், உபாத்திமார்,

இப்போது இவ்வாலயத்தில் கூடிவந்திருக்கிற சபையார்,

வியாதியஸ்தர்,

துக்கத்திலிருப்பவர்,

மரித்துப்போனோர்.

நமது ஆண்டவரின் தாயாகிய பாக்கியவதி கன்னி மரியாளுக்காகவும், பரலோகத்தில் கடவுளோடிருக்கிற சகல பரிசுத்தவான்களுக்காகவும் நாம் அவரை ஸ்தோத்தரிக்கிறோம்.

இங்குள்ள ஜனங்கள் அனைவரும் சொஸ்தமாக்கப்படப் படும்படி இயேசு ரட்சகரிடம் கொண்டுவரப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் தேவையானது இன்னதென்று நமக்குத் தெரியாது. ஆனால் ஒவ்வொருவருக்கும் இயேசு ஸ்வாமி அவசியம்.

ஆதலால் நாமும் எல்லாரையும் அவரிடத்தில் கொண்டு வருகிறோம்.

பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேர வருகிறவர்களுக்குப் பின்வரும் அழைப்பு ஜெபத்தைச் சொல்லி குருவானவர் அழைக்கிறார்.

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புதிதாக்கப்பட்டவர்களாய் அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், விசுவாசத்தோடு சேர்ந்து, உங்களுக்கு ஆறுதல் உண்டாக இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கிக் கொள்ளுங்கள். அதற்காகப் பணிவாய் முழங்கால் படியிட்டுச் சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.



தமது பிள்ளைகள் கெட்டவர்களாக இருக்கும்போதும் கூட, தேவன் எவ்விதமாக அவர்களை நேசிக்கிருர் என்பதை இப்படம் காண்பிக்கிறது. படத்தில் காட்டப்படும் மகன் மகா துஷ்டனுக ஜீவித்துக்கொண்டிருந்தான். ஆனுல் அதை உணர்ந்து விசனப்பட்டு, தகப்பனிடம் சொல்ல வருகிருன். தகப்பன் ஓடிப்போய் மகனை சந்தித்து அவனை விருந்துக்கு அழைக்கிருர்.

நாம் இவ்வாராதனையில், நம் பிதாவிடம் வருவோமானுல் அவர் நம்மை வரவேற்க இங்கேயே இருக்கிருர்.

நாம் நினைத்ததும், பேசியதும், செய்ததுமான கெட்ட காரியங்களை நினைவுகூருகிருேம்.

நாம் அவற்றை உணர்ந்து துக்கிப்பதாகக் கர்த்தரிடம் சொல்லுகிருேம்.

நல்லவர்களாய் ஜீவிக்க விரும்புகிருேம்.

குருவானவர் அல்லது உதவி குருவானவர் பொதுவான பாவ அறிக்கையைத் தொடங்குகிருர்:

சர்வவல்லமையுள்ள தேவனே.—

எல்லாரும் சேர்ந்து பொதுவான பாவ அறிக்கையைச் சொல்லுகிறோம்:

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, சகலத்தையும் சிருஷ்டித்தவரே, சகல மனிதருக்கும் நியாயாதிபதியே, தேவரீருடைய நீதியுள்ள உக்கிர கோபாக்கினை எங்கள்மேல் வரத்தக்கதாக, நாங்கள் அடிக்கடி நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும், உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அகங்கரித்துச் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம்; இந்தக் குற்றங்களைக் குறித்து நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, முழுமனதோடே துக்கப்படுகிறோம்; அவைகளை நினைத்து, வேதனைப்படுகிறோம்; அவைகள் எங்களாலே சுமக்கப்படாத பாரம். எங்களுக்கு இரங்கும், மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் செய்த யாவையும், உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு மன்னியும்; உமது நாமத்துக்குக் கனமும் மகிமையும் உண்டாக, நாங்கள் புதிதாக்கப்பட்டவர்களாய் இனி எப்பொழுதும் உமக்கு ஊழியஞ்செய்து, உமக்குப் பிரியமாய் நடந்துவரும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமென்.

குருவானவர் பாவ விமோசனத்தைக் கூறுகிறார்:

உத்தம மனஸ்தாபத்தோடும் உண்மையான விசுவாசத்தோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச்செய்வோம், என்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவன், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று உங்களை விடுதலையாக்கி, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி, நிலைநிறுத்தி, உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென்.



இயேசுஸ்வாமி இரு கள்ளர் நடுவில் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார். சிலர் அவரைப் பார்த்து விசனப்படுகிறார்கள்: சிலர் அவரைப்பற்றி ஒன்றும் நினையாதவர்களாயிருக்கிறார்கள். ஆனால் இயேசுஸ்வாமி அவர்கள் எல்லாருக்காகவும் பின்வருமாறு ஜெபிக்கிறார்:

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வதின்னதென்று அறியாதிருக்கிறார்கள்"

(தொடர்ச்சி 24-ம் பக்கத்தில் காண்க)

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

இயேசுவானவர் உங்களுக்காகவும் ஜெபிக்கிறார்.

கர்த்தர் உங்களுக்கு மன்னிக்கிறார். குருவானவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

பின்வருவதை மிகவும் அமைதலாகச் சொல்லுங்கள்; பரம தகப்பனே, எனக்குப் பாவமன்னிப்பை அளித்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்.

குருவானவர் ஆறுதல் மொழிகளைக் கூறுகிறார்:

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் நமது இரட்சகராகிய கிறிஸ்து திருவுளம்பற்றுகிற ஆறுதலான வார்த்தைகளைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்:

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்குப் பாத்திரமுமானது.

பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்:

ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே.

நமக்காகப் பிறக்கவும்,
நமக்காக ஜீவிக்கவும்,

நமக்காக மரித்து, நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்கவும் தம்முடைய குமாரனுகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பினதினுலே தேவன் நம்மில் எவ்வளவாக அன்புகூர்ந்தார் என்பதை வெளிப்படுத்தினுர்.

யாவரிலும் சிறந்த இயேசுவே,
சாந்தம் நிறைந்த தாயின் சாந்த சுதனே,
தொழுவம் தன்னில் பிறந்த சகோதரரே,
தொழும் அடியார் எமக்கு ஊக்கம் தருவீர்.

இப்போது இந்த ஆராதனையின் அதிக முக்கியமான பாகம் ஆரம்பிக்கிறது.

குருவானவர் பின் வருவதைப் பாடுகிறார்.

கர்த்தர் உங்களோடிருப்பாராக.

மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

குரு: உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

மறுமொழி: எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

குரு: நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

மறுமொழி: அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

குருவானவர் பின் வருவதைப் பாடுகிறார்.

கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறது மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரமசபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி—

சபையார் எல்லோரும் குருவானவரோடு சேர்ந்து பின்வருவதைப் பாடுகிறார்கள்:

கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமையுண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

இங்கே உன்னத கீதத்தைப் பாடலாம்.

கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர்.

உன்னதத்திலே ஓசன்னா.

பின்பு குருவானவர் முழங்கால்படியிட்டு வணக்கமாய் நெருங்கிச் சொல்லும் ஜெபத்தைச் சொல்லுகிருர்:

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத்துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறேம். உம்முடைய மேஜையின் கீழ்விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனுலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கஞ்செய்கிற லட்சணமுடைய மாருத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனுகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தால் எங்கள் பாவமுள்ள சரீரம் சுத்தமாகி, அவருடைய விலையுயர்ந்த இரத்தத்தால் எங்கள் ஆத்துமா கழுவப்படுவதற்கும், எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கும், ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

குருவானவர் தமக்காகவும் பரிசுத்த நற்கருணையை வாங்கப்போகிற யாவருக்காகவும் ஜெபிக்கும்போது,

இயேசுஸ்வாமியின் ஆராதனையில் நாம் அவருக்கு அருகே வரக்கூடும் என்னும் இவ்விஷயம் எவ்வளவு இன்பமானது என்பதை நினைத்துப்பாருங்கள்.

இந்தப் பிள்ளைகள் இயேசுவானவருக்கு அருகில் வர பயப்படவில்லை.

மகிழ்ச்சியாக அவர் புகழைப் பாடினார்கள்.

இயேசுஸ்வாமியை நோக்கிப் பார்த்தார்கள்.

அவர் சொல்வதைக் கவனித்துக்கேட்டு அவரை நேசித்தார்கள்.

நாமும் அவரோடு இருந்து, அவரை நோக்கிப்பார்த்து, அவர் கூறுபவைகளை கவனித்துக்கேட்டு, அவரை நேசிப்போமாக.

குருவானவர் பிரதிஷ்டை ஜெபத்தைச் சொல்லுகிறார்:

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் பரமபிதாவே, தேவரீர் எங்களுக்கு உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரேதரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல்; தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அநுசரித்து வரும்படி தமது சுவிசேஷத்தில் கட்டளையிட்டிருக்கிறாரே. இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்சரசத்தையும் பெற்றுக்கொள்ளும்போது, அவருடைய பரிசுத்தமுள்ள சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவர்களாகும்படி, கிருபை செய்தருளவேண்டுமென்று மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.



நாம் ஆராதனையின் அதிக பரிசுத்தமான பாகத்திற்கு வந்திருக்கிறோம். வானம் திறந்திருக்கிறது, கர்த்தராகிய பிதா நமது காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி தமது கரங்களை நீட்டிக்கொண்டிருக்கிறார். சிலுவையின்மேல் தொங்குகிற இயேசுவை அவருக்கு சமர்ப்பிக்கிறோம்.

அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

அப்படியே இராப்போஜனம் பண்ணினபின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்;

இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது;

இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம் பற்றினார். ஆமென்.

பரிசுத்த நற்கருணையைப் பெறும்படி குருவானவர் தம்மை ஆயத்தம் செய்கிறார்.

இயேசுவின் பரிசுத்த சரீரமாகிய அப்பத்தை உட்கொள்ளுகிறார். அவரை வணங்கும்படி முழங்கால்படியிடுகிறார். இயேசுவின் விலையுயர்ந்த இரத்தத்தைப் பானம் பண்ணுகிறார். அவரைப் பணிந்துகொள்ளும்படி மற்றொருமுறை முழங்கால்படியிடுகிறார்.

குருவானவர் இயேசுவின் சரீரமாகிய அப்பத்தைக் கரங்களில் ஏந்திய வண்ணம், சபையார் முகமாகத் திரும்புகிறார்.

உங்கள் மனதில் பின்வருமாறு சொல்லிக்கொள்ளுங்கள்:—

பாரும் பரமபிதாவே, இயேசுஸ்வாமியை நோக்கிப் பாரும்.

இயேசுஸ்வாமி இங்கே இருக்கிறார். பரிசுத்த பீடத்தின்மேல் அவரது திருச் சரீரமும் திரு இரத்தமும் இருக்கின்றன.

உங்கள் மனதில் பின்வருமாறு சொல்லுங்கள்:—

இயேசுவே உம்மை ஆராதிக்கிறேன்.

தூயதாம் சாக்கிரமெந்தில் நீர் மறைந்திருக்கிறீர்.

எமக்காய் சிலுவையிலறையப்பட்ட இயேசுவே வாழ்க!

பின்வருவது பாடப்படலாம்.

உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே! எங்களுக்கு இரங்கும்.

உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே! எங்களுக்கு இரங்கும்.

உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே! எங்களுக்குச் சமாதானம் அருளிச் செய்யும்.

பரிசுத்த நற்கருணையில் பங்குபெறப்போகிறவர்கள் பரிசுத்த பீடத்தின்முன் போய் முழங்கால்படியிடுகிறுர் கள்.

குருவானவர், ஒவ்வொருவருக்கும் பரிசுத்த அப்பத் தைக் கொடுத்துக்கொண்டே சொல்லுகிறதாவது:—

“உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தரா கிய இயேசுகிறிஸ்துவின் சரீரம் உன் சரீரத்தையும் ஆத்து மாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது.”

குரு அல்லது உதவிகுருவானவர் பரிசுத்த பாத்தி ரத்தை ஒவ்வொருவரிடமும் கொடுக்கும்பொழுது சொல்லுகிறதாவது:

“உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உன் சரீரத்தையும் ஆத்து மாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது.”

காணிக்கை படைக்கையில் தேவனுக்குப் படைக்கப் பட்ட அப்பத்தையும் திராட்சரசத்தையும் குருவானவர் ஆசீர்வதிக்க, தேவன் அதை நமது ஆத்துமாக்களைப் போஷித்து நமது சரீரங்களைப் பலப்படுத்தக்கூடியதான இயேசுஸ்வாமியின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றி விட்டார்.

நீங்களும் அத்தியட்சரால் திடப்படுத்தலைப் பெற்று திருப்பீடத்தண்டைபோய் நற்கருணையாம் ஐக்கியத்தில் சேரும் காலத்தை எதிர்பார்த்திருங்கள்.

திருப்பீடத்தண்டை நிற்கும் குருவானவருக்காகவும் ஜனங்களுக்காகவும் ஜெபியுங்கள். நீங்கள் நேசிப்பவர் களுக்காக எல்லாம் ஜெபியுங்கள். ஞானப்பாட்டை ஒன்று சேர்ந்து பாடுங்கள்.

குருவானவர் கர்த்தருடைய ஜெபத்தை ஆரம்பிக்கிறார்:

பரமண்டலங்களிலிருக்கிற—

எல்லாரும் குருவானவரோடு சேர்ந்து பின் வருவதைப் பாடுகிறார்கள்:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

பின்பு குருவானவர் 40-ம் பக்கத்திலுள்ள ஸ்தோத்திர ஜெபத்தையாவது கீழேவரும், நம்மைப் படைக்கும் ஜெபத்தையாவது சொல்லுவார் அல்லது பாடுவார்:—

பரமபிதாவாகிய கர்த்தாவே, உமது அடியாராகிய நாங்கள் இப்பொழுது செலுத்தியிருக்கிற துதிதோத்திர பலியை இரக்கமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, தயவுள்ள பிதாவாகிய உம்மை முழுமனதோடே வேண்டிக்கொள்ளுகிறோம். உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தினாலும் மரணத்தினாலும், அவர் திரு இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய், நாங்களும் மற்றுமுள்ள உம்முடைய சபை அனைத்தும் பாவமன்னிப்பையும், அவர் பாடுகளினால் உண்டான மற்றெல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படி, தேவரீர் கிருபை செய்யவேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். கர்த்தாவே, சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை முழுவதும் தேவரீருக்குப் புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். இப்பொழுது பரிசுத்த நற்கருணையில் பங்கு பெற்றிருக்கிற எங்கள் எல்லாரையும் தேவரீர் உமது கிருபையினாலும் பரம ஆசீர்வாதத்தினாலும் நிரப்பியருளவேண்டுமென்று பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அநேகவிதமாய் இருக்கிற எங்கள் பாவங்களினாலே தேவரீருக்கு எந்த பலியும் செலுத்துவதற்கு நாங்கள் அபாத்திரராயிருந்தும் எங்கள் பாத்திரா பாத்திரத்தைத் தேவரீர் கவனியாமல், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் கடமையின்படி நாங்கள் செலுத்தியிருக்கிற பணிவிடையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற தேவரீருக்கு, அவர் மூலமாய்ச் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. **ஆமென்.**



சாஸ்திரிகள் தாங்கள் கொடுக்கக்கூடிய மேலான காணிக்கையை இயேசுவுக்குக் கொடுத்தார்கள். நாமும் குருவானவரோடு சேர்ந்து பரிசுத்த பீடத்தில் நம்மையும், நமது ஆத்துமாக்களையும், சரீரங்களையும் அவருக்கு சமர்ப்பிப்போமாக.

வறிஞனாய் நிற்கும் நான்,
அவருக்கெதை அளிப்பேன்?
நான் ஓர் மேய்ப்பன் ஆகில்
நல் ஆட்டுக்குட்டியை ஈவேன்:

ஓர் ஞானி ஆகில்
என் பங்கைச் செய்வேன்:
அவருக்கெதை நான் அளிப்பேன்?
என் இதயத்தை அளிப்பேன்.

38-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் (நம்மைப் படைக்கும்) ஜெபத்திற்குப் பதிலாகப் பின்வரும் நன்றி கூறும் ஜெபம் குருவானவரால் சொல்லப்படும் அல்லது பாடப்படும்:

நித்திய ஜீவியாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்றவிதமாய் வாங்கியிருக்கிற எங்களை, தேவரீர் உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தினால் போஷித்ததற்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் எங்கள்மேல் தயைகூர்ந்து கிருபாகடாட்சம் வைத்திருக்கிறதையும், உத்தம விசுவாசிகளின் கூட்டமும் உமது நேசகுமாரனுடைய ஞான சரீரமுமாகிய சபையில் நாங்கள் அவயவங்களாய் இணைக்கப்பட்டிருக்கிறதையும், அவருடைய அருமையான பாடுகளினாலும் மரணத்தினாலும் உண்டான புண்ணியத்தினாலே, உமது நித்திய ராஜ்யத்துக்கு நாங்கள் சுதந்தரராயிருக்கிறதையும், இந்த நற்கருணையினாலே, எங்களுக்கு நிச்சயப்படுத்தினதற்காக முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பரம பிதாவே, நாங்கள் இந்த பரிசுத்த ஐக்கியத்தில் நிலைத்திருந்து, நாங்கள் செய்யும்படி தேவரீர் நியமித்திருக்கிற நற்கிரியைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற, உமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்தஆவிக்கும் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.

பின்பு எழுந்து நின்று, குருவானவரோடு சேர்ந்து, துதிகீதத்தைப் பாடவேண்டும்:

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே; சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம். உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம், உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

கர்த்தராயிருக்கிற ஒரேபேறுன குமாரனுகிய இயேசு கிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும், உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனுகிய பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும்.

நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர். கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனுகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவரா யிருக்கிறீர். ஆமென்.

குருவானவர் சபையாரிடம் திரும்பி ஆசீர்வாதம் கூறுகிறார்:

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக் கடவது. ஆமென்.

ஒரு ஞானக் கீதம் பாடப்படுகிறது.

குரு பரிசுத்த பீடத்தைவிட்டு அகலுமுன்னதாகக் கடைசித் தேறுதல் வசனத்தைக் கூறுகிறார்.

அதன் பின்பு அவர் பரிசுத்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு வெளிச்செல்கிறார்.

உயிர்த்தெழுந்த நமது ஆண்டவராகிய இயேசு, உயிர்த்தெழுந்த நாள் இரவில் மேலறையிலிருந்த தமது சிநேகிதரிடம் வந்து "உங்களுக்குச் சமாதானம்" என்ருர்.

குருவானவர் ஆசீர்வாதம் கூறும்போது இயேசுஸ்வாமிக்குப் பதிலாகப் பேசுகிருர்.

உங்கள் மனதில் பின்வருமாறு சொல்லுங்கள்.

மகிமையின் ராஜாவே, சமாதானப் பிரபுவே,
நான் உம்மை நேசிப்பேன்.

தேவாலயத்தைவிட்டுப் போகுமுன் இயேசுஸ்வாமிக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்.

கீழ்வரும் பரிசுத்த ஸ்துதியைச் சொல்லலாம்.

பரிசுத்த ஸ்துதிகள்.

கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படக்கடவர். அவர் பரிசுத்த நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது.

எல்லாம் வல்ல பிதாவாகிய தேவன் ஸ்தோத்திரிக்கப் படக்கடவர்.

மெய்யான கர்த்தரும், மெய்யான மானிடருமாகிய இயேசுகிறிஸ்து ஸ்தோத்திரிக்கப்படக்கடவர்.

இயேசுவின் மகா பரிசுத்த நாமம் ஸ்தோத்திரிக்கப் படக்கடவது.

மகிமையின் சிங்காசனத்திலும் பரிசுத்த பீடத்தி லுள்ள மகா பரிசுத்த சாக்கிரமெந்திலும் உள்ள இயேசு நாதர் ஸ்தோத்திரிக்கப்படக்கடவர்.

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் ஸ்தோத் திரிக்கப்படக்கடவர்.

தாயாகிய கன்னிமரியம்மாள் ஸ்தோத்திரிக்கப்படக் கடவர்.

தேவதூதர் மூலமாயும், தம் பரிசுத்தவான்கள் மூல மாயும் கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படக்கடவர்.

தேவன் ஸ்தோத்திரிக்கப்படக்கடவர்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1942. B 9355 1 E. 1 M.